**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 82 of 2023**

**<u>04.09.2025</u>**

**PW1 – திரு. தியாகராஜன்**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை– (எதிர்மனுதாரர் தரப்பில்)**

நான் 24.08.1994 ல் நடத்துநராக பணியில் சேர்ந்து 30.09.2022 ல் நடத்துநராக பணிஓய்வு பெற்றேன். நான் கடைசியாக வாங்கிய அடிப்படை சம்பளம் ரூ.44,900/–. 2009, 2010, 2016, 2017 ஆண்டுகளில் நான் வாங்கிய சம்பளத்தை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை. மனுவில் விடுப்பு ஒப்படைப்பு தொகை எவ்வளவு கேட்டுள்ளேன் என்று ஞாபகம் இல்லை. விடுப்பு ஒப்படைப்பு தொகைக்கு உண்டான கணக்கீடு தவறாக செய்து தொகை ரூ.1,26,132/– கோரியுள்ளேன் என்றும் எனக்கு வரவேண்டிய தொகை ரூ.46,932/– என்றும் சொன்னால் சரியல்ல. பழைய அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் நிர்வாகம் தொகை கணக்கிட்டு சொல்லியுள்ளார்கள்.

எனக்கு ரூ.44,900/– அடிப்படை சம்பளத்தின்படி தொகை வரவேண்டும். விடுப்பு ஒப்படைப்பு தொகை அந்த மாதம் நான் வாங்கிய அடிப்படை சம்பளத்தின அடிப்படையில் கணக்கிட்டு வழங்குவார்கள் என்றால் சரிதான். ஆனால் அப்போதே தொகை தரப்படவில்லை. 10 நாள் சம்பள தொகையாக எந்த நாட்களுக்கு கேட்கிறேன் என்றால் எங்களுக்கு 20ம் தேதி வரை கணக்கிடப்பட்டு சம்பளம் தரப்பட்டது. நான் ஓய்வு பபெற்ற தேதியான 30.09.2022 தேதி வரையான 10 நாட்களுக்கான சம்பளம் கோரியுள்ளேன். எவ்வளவு தொகை மனுவில் கோரியுள்ளேன் என்று தெரியவில்லை. ரூ,19,769/– தொகை தான் தரப்படவேண்டும் என்றும், தவறாக கணக்கிட்டு ரூ.21,022/– கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனுவில் அகவிலைப்படி நிலுவைத்தொகையாக எவ்வளவு கேட்டுள்ளேன் என்று ஞாபகம் இல்லை.

என்னுடைய வங்கிக்கணக்கில் 01.02.2024 அன்று தொகை ரூ.792/- வரவு வைக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு நிலுவைத்தொகையாக ரூ.13,576/- வரவேண்டியுள்ளது என்றும் தவறாக கணக்கிட்டு ரூ.15,008/- கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ERBS. IRTT தொகைகளை வாங்கிக்கொண்டேன் என்றால் சரிதான். ERBS தொகை ரூ.16,750/- மற்றும் IRTT தொகை ரூ.4500/- பெற்றுக்கொண்டேன். சம்பள நிலுவைத்தொகை 2019 ஒப்பந்தப்படி எவ்வளவு கேட்டுள்ளேன் என்று ஞாபகம் இல்லை. 12.07.2023 ல் ரூ.24,006/- தொகை என்னுடைய வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்றால் தெரியவில்லை. எனது வங்கிக்கணக்குப்புத்தகத்தை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். எனக்கு கொடுக்கப்படவேண்டிய சம்பள நிலுவைத்தொகை கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் நான் தவறாக கணக்கிட்டு சம்பள நிலுவைத்தொகை ரூ.45,860/- கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பள நிலுவைத்தொகைக்கான சரியான கணக்கீட்டை மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சென்ற வருடம் டிசம்பர் மாதம் நான் வாங்கிய பென்சன் தொகை ரூ.14,480/-. எனக்கு ரூ.14,580/- பென்சன் தொகையாக கொடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. சென்ற மாதம் பென்சன் தொகையாக ரூ.19,632/- பெற்றேன். என்னுடன் ஓய்வு பெற்றவர்களுக்கு 14 சதவீதம் அகவிலைப்படி வழங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது அகவிலைப்படி எவ்வளவு சதவீதம் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டுவருகிறது என்று தெரியவில்லை. சரியான கணக்கீட்டின் அடிப்படையில் அகவிலைப்படி கணக்கிடப்பட்டு எனக்கு பென்சன் தொகை வழங்கப்பட்டுவருகிறது என்றும், தவறான கணக்கீட்டின் அடிப்படையில் பென்சன் நிலுவைத்தொகையாக ரூ.61,812/- கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அகவிலைப்படியை அதிகப்படியாக கணக்கிட்டு இந்த கணக்கீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவப்படி ரூ.100/- கொடுத்துவந்தார்கள் என்றால் தெரியவில்லை. எவ்வளவு கணக்கிட்டு மனுவில் தொகை கேட்டுள்ளேன் என்றால் தெரியவில்லை. எதிர்மனுதாரர் நிர்வாகம்

எனக்குமொத்தமாக ரூ.80,277/– கொடுக்கவேண்டும் என்றும், அதில் விடுப்பு ஒப்படைப்பு தொகை ரூ.46,932/–, அகவிலைப்படி நிலுவைத்தொகை ரூ.13,666/–, 10 நாள் நிலுவை சம்பளம் ரூ.19,769/– என்றும் சொன்னால் பழைய அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் நிர்வாகம் தொகை கணக்கிட்டுள்ளார்கள். நான் புதிய அடிப்படை சம்பளத்தின் அடிப்படையில் தொகை கேட்கிறேன். என்னுடைய சம்பளத்தின் அடிப்படையில் சரியாக கணக்கிடப்பட்டு தொகை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனுவில் 18 சதவீதம் வட்டி கோரியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தவறான கணக்கீட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem